**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**SC.No. 75/2024 - PW-3**

| | |
|---|---|
| Name | திரு.கங்காதரன் |
| Husband/Father Name | கணேசன் |
| Village /Area | மேலப்புலம் புதூர் |
| Taluk | நெமிலி |
| Occupation | ஓட்டுநர் |
| Age | 65 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 10.10.2025.

**(எதிரிகள் ஆஜர்).**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்த உமாபதி என்னுடைய தம்பியாவர். கடந்த 6 முதல் 7 ஆண்டுகளுக்கு முன்பு எங்களுக்கு சொந்தமான நிலத்தருகே எனது சகோதரர் இரத்த வெள்ளத்தில் இருப்பதாக எனக்கு தகவல் தெரிவித்தனார். நான் சென்று பார்த்த போது தலை வேறு உடல் வேறாக கிணற்றில் என் தம்பியின் உடல் மிதந்து கொண்டிருந்தது. எங்களுக்கும் கன்னியப்பன் மற்றும் அஞ்சலி தேவி என்பவருக்கும் சொத்து சம்பந்தமாக பிரச்சனை இருந்து வந்தது. 3 முறை நாங்கள் உயர் நீதிமன்றம் வரை சென்று ஜெயித்து விட்டோம்.

சம்பவம் குறித்து கும்பலாக சென்று புகார் கொடுத்தோம். புகாரின் பேரில் விசாரணை செய்தார்கள். விசாரணையில் வசூர் ராஜாவும் தான் சம்பவத்திற்கு காரணம் என்று போலீசார் கூறினார்கள். உமாபதிக்கு இரண்டு மகன்கள் உள்ளார்கள். இது சம்பந்தமாக போலீசார்

என்னை விசாரித்து வாக்குமூலம் செய்தார்கள்.

**<u>1, 2, 5 முதல் 12 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

எனது தம்பி இறப்பு குறித்து எனது தம்பி மனைவி மீனாட்சி தான் போன் மூலம் மதியம் 12.00 முதல் 01.00 மணிக்குள் எனக்கு தகவல் கொடுத்தார். அந்த நேரத்தில் நான் காஞ்சிபுரத்தில் இருந்தேன். நான் இருந்த இடத்திற்கும் எனது தம்பியின் உடல் இருந்த இடத்திற்கும் இடைப்பட்ட தொலைவு 25 கி.மீ ஆகும். நான் காஞ்சிபுரத்திலிருந்து சம்பவ இடத்திற்கு பஸ்சில் தான் 1 மணி நேரம் பயணம் செய்து சுமார் 02.00 மணிக்கு போய் சேர்ந்தேன். நான் சம்பவ இடத்திற்கு சென்று பார்த்த போது கிணற்றிற்குள் எனது தம்பியினுடைய பிரேதம் இருந்தது. அப்போது ஊரே கூடியிருந்தது. நான் சென்ற போது போலீசார் அங்கு இல்லை.

எனது தம்பின் பிரேதத்தை கிணற்றில் இருந்து மாலை 03.00 மணியளவில் ஊர் காரர்கள் வந்து எடுத்தார்கள். பிரேதத்தை எடுக்கும்போது போலிசார் இருந்தார்கள் புகைப்படம் எடுத்தார்கள். நான் சென்ற போது எனது தம்பி மனைவி மீனாட்சியும் அங்கு இருந்தாரா என்றால் இருந்தார். எங்களுக்கும் அஞ்சலி தேவிக்கும் இடையே சொத்து பிரச்சனை இருந்த விவரத்தை போலீஸ் விசாரணையில் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். ஒரு வாரம் தவறாமல் நாங்கள் காவல் நிலையத்திற்கு மேற்படி சொத்து பிரச்சனை குறித்து சென்று வருவோம்.

சம்பவ இடத்தில் எனது தம்பியினுடைய சைக்கிளை பார்த்தேனா என்றால் இல்லை. நான் உண்மைக்கு மாறாக தவறுதலாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சொத்து

பிரச்சனை சம்பந்தமான ஆவணங்கள் எதையும் நான் போலீசாரிடம் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரிதான்.

**3 மற்றும் 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

எதிரி கன்னியப்பன் என்பவர் முன்பு ஊர் தலைவராக இருந்தாரா என்றால் ஆமாம். நான் நிலம் வாங்கிய பிறகு தான் ஊர் தலைவர் ஆனார். அவர் மீது பொறாமையில் அவரை இந்த வழக்கில தவறுதலாக சேர்க்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. ஏற்கனவே அவருக்கு எதிராக வழக்கு நிலுவையில் உள்ளது. சிவில் வழக்கு முழு விவரங்களை நான் போலிசாரிடம் கூறவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரி கன்னியப்பனுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

Jayamangalam Sudhakaran

II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2025.10.10 17:42:43 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.